Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.
**S.C.No. 19 of 2023**

| | | |
|---|---|---|
| Deposition of P.W.18 (L.W. 27 ) | } Prosecution<br>} Defence<br>} | |
| Name of the Witness | : | திரு.பழனிசாமி |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 16.02.2026.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் ஏரியூர் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 31.05.2022ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்போது சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் ஏரியூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது 29.05.2022ம் தேதி காலை 08.00மணிக்கு

பெரும்பாலை காவல் உதவி ஆய்வாளர் மதியழகன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது கோவள்ளிகோம்பை கிராமத்தை சேர்ந்த கந்தசாமி மனைவி சகுந்தலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை குற்ற எண் 72/2022 சட்டபிரிவு 341, 302 இதச பிரிவு கீழ் பதிவு செய்து வைத்த வழக்கு கோப்பை என் பார்வைக்கு வைத்ததை காலை 08.30மணிக்கு நான் பெற்று பரிசீலனை செய்து காலை 09.00மணிக்கு பென்னாகரம் - மேச்சேரி மெயின் ரோடு கோவள்ளிகோம்பை பஸ் நிறுத்தம் விநாயகர் கோவில் முன்பு சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் அருண்குமார், நாகேந்திரன் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) பின்னர் காலை 10.00மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த ரத்தம் படிந்த மண் மாதிரிக்கு கொஞ்சம், ரத்தம் படியாத மண் மாதிரிக்கு கொஞ்சம், ரத்தகரை படிந்த புளூகலர் வார் உள்ள வெள்ளை மற்றும் புளூ கலர் செருப்பு 1, ரத்தகரை படிந்த அலுமினிய பால் கேன் 1, ரத்தகரை படிந்த TN 29 BE 7877 என்ற பதிவு எண் கொண்ட புளூகலர் டிவிஎஸ் வேகா ஸ்கூட்டி 1 ஆகிய தடயங்களை மகஜரில் கைப்பற்றினேன். மேற்படி பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜரில்

மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்னர் காலை 11.00மணிக்கு சம்பவ இடத்தில் பஞ்சாயத்தார்கள் வெங்கடேஸ், நவீன், கோவிந்தராஜ், சரவணன் மற்றும் கார்த்திக் இவர்கள் முன்னிலையில் சாட்சிகள் சகுந்தலா, பழனிசாமி, சௌந்தர்யா, சிவா மற்றும் அன்னக்கிளி கோவள்ளிகோம்பை ஆகியோர்களை விசாரணை செய்து மேற்படியாளர்களாது வாக்குமூலங்களை தனி தனியாக பதிவு செய்தேன்.

3) மேலும் சம்பவ இடத்தில் 13.00மணி வரை கந்தசாமி பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத விசாரணை முடித்தும் இறப்பின் உண்மையான காரணத்தை அறியும் பொருட்டு 13.15மணிக்கு பிரேதத்தை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கணேசன் என்பவர் மூலம் தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். பின்னர் சம்பவ இடத்தில் சாட்சிகள் மாதம்மாள், சாந்தா, ஆறுமுகம், விஜய், கோவிந்தி, சுதா, அருண்குமார் மற்றும் நாகேந்திரன் ஆகியோரை விசாரணை செய்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) இவ்வழக்கில் தொடர் புலன் விசாரணை மேற்கொண்டு தகவலின் பேரில் 29.05.2022ம் தேதி பிற்பகல் 03.30மணிக்கு பெரும்பாலை காவல் நிலைய சரகம் பழையூர் செக்பேஸ்ட் அருகில் வைத்து TN 29 AF 3588 என்ற

பதிவுஎண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் மோட்டார் சைக்கிளில் பென்னாகரம் பக்கமிருந்து மேச்சேரி நோக்கி வந்த எதிரி குபேந்திரன் என்பவரை பிடித்து விசாரித்த போது எதிரி தான் செய்த கொலை குற்றத்தை ஒப்பு கொண்டவரை கைது செய்தும், தகவலின் பேரில் வரவழைக்கப்பட்ட சாட்சிகள் பொற்கொடி, சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் பிற்பகல் 03.45 மணிக்கு விசாரணை செய்ய எதிரி குபேந்திரன் எவ்வித ஆசைவார்த்தையோ, அச்சுறுத்தலோ இன்றி தனாகா முன்வந்து தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும் அதில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை கூட்டி சென்றால் நான் கந்தசாமியை கொலை செய்ய பயன்படுத்திய கொடுவாள் கத்தி, சம்பவத்தின் போது தான் அணிந்திருந்த ரத்தகரை படிந்த துணிகளை புதரில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்வேன் எனவும், கந்தசாமியை வெட்டி கொலை செய்த இடத்தை அடையாளம் காட்டுவதாக சொன்னார். பின்னர் மாலை 04.45மணிக்கு எதிரி குபேந்திரன் சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக கூறி ஆஜர் செய்த TN 29 AF 3588 என்ற பதிவுஎண் கொண்ட பஜாஜ் டிஸ்கவர் மோட்டார் சைக்கிளை வழக்கின் நிமித்தம் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன், அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன்.

5) பின்னா் எதிரி மற்றும் சாட்சிகளுடன் மாலை 05.30மணிக்கு குண்டுபெருமாள்கோவில் பென்னாகரம் - மேச்சேரி மெயின்ரோடு வந்தும் ரோடின் தென்புறம் உள்ள முட்புதரிலிருந்து எதிரி குபேந்திரன் மறைத்து வைத்திருந்து எடுத்து ஆஜர் செய்த ரத்தகரை படிந்த கொடுவாள் கத்தி 1, ரத்தகரை படிந்த பச்சை கலா் பார்டா் வைத்த நான்குமூல வெள்ளை வேட்டி 1, ரத்தகரை படிந்த வெள்ளை கலா் அரைகை சட்டை 1 இவைகளை வழக்கின் நிமித்தம் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியும் அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்னா் மேற்படி சாட்சிகள் பொற்கொடி, சக்திவேல் இவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6) பின்னா் புறப்பட்டு எதிரி அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை பார்வையிட்டும் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் 19.00மணிக்கு நிலையம் வந்து எதிரியை திரேக சோதனை செய்து நிலைய காவலில் வைக்கப்பட்டது. எதிரியின் கைது விவரம் பற்றி எதிரியின் உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் இரவு 08.15மணிக்கு பிரேத பரிசோதனை அலுவல் சென்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பிரேதத்தின் மீது கைப்பற்றிய உடைமைகள் ரத்தகரை படிந்த சிவப்பு கலா் அரைகை சட்டை, நீலம் வெள்ளை பொடிகலர் கட்டம் போட்ட லுங்கி, காப்பி கலர் டிராயர் டைப் ஜட்டி,

ரத்தகரை படிந்த சிவப்பு வெள்ளை கட்டம் போட்ட துண்டு மற்றும் வெள்ளி அரைஞான் கொடி 1 இவைகளை தனி அறிக்கையுடன் பெரும்பாலை காவல் நிலையத்தில் ஆஜா் செய்ததை படிவம் 91ல் கைப்பற்றினேன்.

7) பின்னா் இரவு 08.30மணிக்கு மேற்படி எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற அடைப்பு காவல் அறிக்கையுடன் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவா் பென்னாகரம் அவா்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்னா் இதுவரை இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயங்களை முறையே படிவம் 91 மூலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் பென்னாகரம் அவர்கள் நீதிமன்றத்திற்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கணேசன் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 (4 எண்ணிக்கை) **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) பின்னர் இவ்வழக்கில் 30.05.2022ம் தேதி இவ்வழக்கில் இறந்து போன கந்தசாமியின் உடல் உள்ளுறுப்புகளை தருமபுரி தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்புவித்து வர சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கணேசன என்பவரை நியமித்து அனுப்பி வைத்தேன். மேலும் இவ்வழக்கில் தொடா் புலன் விசாரணை மேற்கொண்டு 31.05.2022ம் தேதி தருமபுரி அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் மதன்குமாரை விசாரணை செய்து

சடல கூராய்வு அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் துரித முதல் தகவல் அறிக்கை கனம் ஜேஎம் பென்னாகரம் நீதிமன்றத்தில் ஒப்படைத்த பெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனைக்கு உடனிருந்து ஆஜர் செய்த உடல ் உள்ளுறுப்புகளை தருமபுரி ஆய்வு கூடத்தில் ஒப்புவித்தும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயங்களை படிவம் 91 மூலம் பென்னாகரம் நீதிமன்றத்தில் ஒப்படைத்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளா ் கணேசன ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். துரித முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளா ் மதியழகன ் ன்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பணி ஓய்வில் சென்றதால் இவ்வழக்கு கோப்பை ஏரியூர் வட்ட காவல் ஆய்வாளர் பொறுப்பு அவர்களிடம் ஒப்புவித்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரா ் புகாரை யாா ் எழுதினார்கள ் என்பதை பற்றி நான் விசாரிக்கவில்லை. புகார்தாரர் புகாரை போலிஸ் இல்லாத பெண் காவல் நிலையத்தில் வைத்து எழுதி கொடுத்ததாக புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளாா ் என்றால ் அதை பற்றி எனக்கு தெரியாது. உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை தாமதமாக நீதித்துறை நடுவரிடம் கொடுத்ததற்கான காரணத்தை கேட்டேனா என்றால்

அன்று ஞாயிற்றுகிழமை என்பதால் நீதித்துறை நடுவரிடம் கொடுத்ததாக சொன்னார். பாஸ்போட் பெற்று முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவரிடம் கொடுத்த பெருமாள் தன்னிடம் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆவணங்கள் தன்னிடம் 02.00மணிக்கு கொடுத்ததாக நீதிமன்ற சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

2) நான் ஏரியூர் காவல் நிலையத்தில் இருக்கும் போது தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்று வழக்கு கோப்பை பெற்று கொண்டேன். சம்பவ இடத்திற்கு காலை 08.45, 08.50 மணிக்குள் சென்று விட்டேன். அங்கு 8 லிருந்து 10 பேர் இருந்திருப்பார்கள். கிராம நிர்வாக அலுவலர் மற்றும உதவியாளா அங்கிருந்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. இறந்து போனவரின மனைவி, மகன மற்றும் அண்ணனை சம்பவ இடத்திலே விசாரித்தேன். கண்ணுற்ற சாட்சிகளும் சம்பவ இடத்திலே இருந்தார்கள். கண்ணுற்ற சாட்சியான சாந்தா தான் சம்பவ இடத்திலே மயக்கம் போட்டு விழுந்து விட்டதாகவும், போலிசார் அவரை பெருந்துறை மருத்துவமனையில் விசாரித்தாக சொல்லியுள்ளார் என்றால அது தவறு. நான சம்பவ இடத்தில தான வாக்குமூலம் வாங்கினேன். கோவள்ளிகோம்பை ஊரின் அமைப்பை பற்றி தெரியாது, ஆனால் ஊரின் உள்ளே சென்றிருக்கிறேன். அந்த ஊருக்குள் போனால் போக வழியாக தான் திரும்ப வரவேண்டும் என்றாலும், ஊரை சுற்றி

மலைபகுதி என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. நான் சாட்சிகளை விசாரிக்கும் போது எதிரி எந்த தவறும் செய்யாததால் அங்கு தான் இருந்தார் என்றால் சரியல்ல.

3) புகார்தாரர் என்னுடைய விசாரணையின் போது TN 73 D 2777 என்ற கார் சம்பவத்திற்கு முன்தினம் இரவு 8.00 மணியளவில் அவர்களின் செங்கல் சூளை வழியாக சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எதிரி தான் முன்தினம் இரவு கார் வந்ததாக என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. அந்த காரில் வந்தவர்கள் கந்தசாமியின் வீடு எங்கே என்று எதிரியிடம் விசாரித்ததால் இறந்த போன கந்தசாமியின் உறவினர்கள் எதிரி தான் கந்தசாமியின் வீட்டை காட்டி கொடுத்ததாக எதிரியின் வீட்டை எரித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரி அடுத்த நாள் தருமபுரி மாவட்ட கலெக்டரிடம் சென்று இது சம்பந்தமாக புகார் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த மனுவை கலெக்டர் அதியமான்கோட்டை காவல் நிலையத்தில் விசாரிக்க சொல்லி அனுப்பி விட்டார் என்றால் சரியல்ல. நான் அதியமான்கோட்டை காவல் நிலையம் சென்று எதிரியை கூட்டி வந்தேன் என்றால் சரியல்ல. சிசிடிவி கேமரா சம்பந்தமாக நான் எந்த புட்டேஜ்ஜீம் எடுத்து விசாரிக்கவில்லை என்றால் அங்கு சிசிடிவி கேமராவே இல்லை.

4) சம்பவ இடத்திலிருந்து முதலில் சின்னம்பள்ளி, பெரும்பாலை, பழையூர் செக்போஸ்ட் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஒரு நபர் கொலை செய்து விட்டு பின்னர் அவரது வீட்டிற்கு சென்று அதே வழியாக மக்கள் கூட்டம் அதிகமாக உள்ள இடத்தில் போகமுடியாது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த சமயம் வெயில்காலம் என்பதால் பால் வண்டி நேரமாக வந்து விடும் என்றாலும், 05.00 மணியிலிருந்து 5.30 மணிக்குள் பாலை வண்டியில் கொடுத்துவிடுவார்கள் என்றால் சரியல்ல.

5) கந்தசாமி எப்படி இறந்தார் என்று யாருக்கு தெரியாது என்றாலும், இறந்து போனவரின் பிரேதத்தை தான் அனைவரும் பார்த்தார்கள் என்றால் சரியல்ல. சாட்சிகள் சாந்தா, மாதம்மாள், ஆறுமுகம், விஜய், கோவிந்த ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சிகளாக என்னால் ஜோடிக்கப்பட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து வழக்கு சான்று பொருள்களை உடனே கைப்பற்றினேன். இந்த வழக்கின் பால் கேன் வழக்கிற்காக என்னால் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கின் சான்று பொருள்களை 29.05.2022 அனுப்பி வைக்கப்பட்டது. அன்று ஞாயிற்றுகிழமை என்பதால் 31.05.2022 அன்று சிபி எண் கொடுக்கப்பட்டது. 29.05.2022 அன்று நான் நீதிமன்றத்தில் வழக்கின் தடய பொருள்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. தடய பொருள்கள் தயார் செய்ய கால தாமதமானதால் தான் நீதிமன்றத்தில்

ஒப்படைக்க தாமதமானது என்றால் சரியல்ல. 30ம் தேதி ஏன் சான்று பொருள்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. 30ம் தேதி பொருள்களை சரிபார்த்து 31ம் தேதி சிபி எண் கொடுக்கப்பட்டது. 31,05.2022ம் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாக கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

6) எதிரியை கைது செய்தது குறித்து அவரது மனைவி கவிதாவிற்கு தகவல் கொடுத்தேன். நான் எதிரியின் மனைவிக்கு தகவலே கொடுக்கவில்லை என்றும், அப்போது அவர் அவரது அம்மா வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. பிரேத விசாரணை சாட்சிகளுக்கு முறையாக சம்மன் கொடுத்து தான் நான் விசாரித்தேன். நான் பிரேத விசாரணை சாட்சிகளின் கையெழுத்து பிரேத விசாரணை அறிக்கையிலும், அவர்களது சம்மனின் வேறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற காவலுக்கு எதிரியை உதவி ஆய்வாளர் மதியழகன், மு.நி.கா 1080 மயில்குமார். மு.நி.கா.1527 சரவணன், காவலர் 472 சிவகுமார் இவர்கள் மூலமாக கடவு சீட்டு கொடுத்து அனுப்பினேன். நான் நீதிமன்ற காவலுக்கு எதிரியை உட்படுத்தும் போது நானும் நீதித்துறை நடுவரிடம் சென்றேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தனியான ஈடுபாடுடன் விசாரித்ததால் தான் நானும் போனேன் என்றால் சரியல்ல. பாதுகாப்பிற்காக நானும் போனேன்.

7) கோவள்ளிகோம்பையிலிருந்து அவர்கள் வீட்டிற்கு போகும் பாதை சம்பந்தமாக எதிரிக்கும் இறந்து போன கந்தசாமி குடும்பத்திற்கு 3 வருடமாக பிரச்சனை இருப்பதாக தெரிந்து கொண்டேன். எதிரியின் வீடும், கந்தசாமியின் வீடும் எதிரே எதிரே இருப்பதால் அது போல் வழிபிரச்சனை வருவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரி கந்தசாமி நிலத்தில் ஆடு மேய்த்ததால் சம்பவம் நடப்பதற்கு முன்தினம் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதாக எதிரி கூறியுள்ள நிலையில் அதை பற்றி விசாரித்தேன என்றால் இல்லை. கந்தசாமிக்கு விவசாய நிலம் இல்லை என்றாலும், செங்கல் சூளை தான் வைத்திருந்ததார் என்றாலும் ஒப்புதல் வாக்குமூலத்தில் விவரங்கள் தவறாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8) எதிரிக்கும் இறந்து போன கந்தசாமிக்கும் எந்த பிரச்சனையும் எந்த முன்பகையும் இல்லை என்றாலும், கந்தசாமியின் மாமனார் புறம்போக்கு இடத்தை கைப்பற்றி அதை அனுபவித்து வந்ததை எதிரி மற்றும் ஊர்காரர்கள் சார்பாக மனு கொடுத்து அந்த இடத்தை ரேசன் கடை, பள்ளி கூடம், கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று சொன்னதால் தான் எதிரி மீது கோபம் கொண்டு கந்தசாமி குடும்பத்தினா் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபடாத எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த

வழக்கின் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே விஏஓ, மற்றும் அவரது உதவியாளர் கந்தசாமியின் இறப்பை பற்றி தகவல் தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே இந்த வழக்கு சம்பந்தமாக கொடுத்த முதல் புகாரை மறைத்து பின்னிட்டு வழக்கிற்காக புகார் தயார் செய்ய தாமதமானதால் தான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க கால தாமதமானது என்றால் சரியல்ல. இறந்து போனவரின் உறவினர்கள் சாலை மறியல் செய்ததால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால்சரியல்ல. வழக்கு நிமித்தமாக விசாரிப்பதற்காக வந்தார். எதிரியின் உறவினர்களை சமாதானம் படுத்த வேண்டும் என்பதற்காக வழக்கு சம்பவத்தில் ஈடுபடாத எதிரி கைது செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்தினம் காரில் வந்த நபர்கள் தான் கந்தசாமியின் இறப்பிற்கு காரணம் என்றால் சரியல்ல. காரில் வந்த நபர்களை விசாரித்திருந்தால் உண்மை தெரிந்திருக்கும் என்றாலும், உண்மையை மறைத்து பொய்யாக இந்த வழக்கு எதிரி மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,<br>
Additional District Judge,<br>
Dharmapuri.